# பொதுக்கூட்ட அறிக்கை

அமைப்பு:  Det Tamilske Fællesskab Viborg (DTFV)
திகதி: 07.03.2026
நேரம்: 15:30–18:00
இடம்: Frivilliges Hus, Ll. Sankt Hans Gade 7, 8800 Viborg

**பங்கேற்ற அங்கத்தவர்கள்**:
33 உறுப்பினர்கள்.

தலைவர் வரவேற்புரையோடு எமது நாட்டில் போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து  ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

**1.தற்காலிக பொதுக்கூட்ட நடத்துனர் (Dirigent)**

திரு.மகேந்திரன் சுந்தரலிங்கம் தேர்ந்தெடுக்கப்பட்டு கூட்டத்தை வழிநடத்தினார்
பொதுக்கூட்டம் சட்ட விதிகளின்படி அழைக்கப்பட்டதென கூட்டத்தலலவர் அறிவித்தார்.

**2.கூட்ட அறிக்கை எழுத்தாளர்**

திரு.அன்ரன் சதீஷ் காசிப்பிள்ளை தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**3.நிகழ்ச்சி நிரல்**

நிகழ்ச்சி நிரலில் கடைசி அம்சமாக (Eventuelt) வேறு

விடயம் என்பவை சேர்க்கப்பட்டது.

**4. நிர்வாக அறிக்கை**

திரு.அன்ரனி தாஸ்  கடந்த பொதுக்கூட்டத்திற்குப் பிறகு 2025ம் ஆண்டு
நடந்த செயற்பாடுகளை ஒவ்வொன்றாக விளக்கினார்.
திருமதி.ரஞ்சி சச்சி மகளிர்களுக்கான  நடத்தப்பட்ட நிகழ்வுகளையும் விளக்கினார்.
இவர்களது விளக்க அறிக்கைகளுக்கு எந்த எதிர் கருத்துக்களும் முன்வைக்கப்படவில்லை.

**5.கணக்கறிக்கை**

திருமதி.சுதாம்பிகை வாமதேவன் அவர்களால் விரிவாக விளக்கப்பட்டது.
ஏற்கனவே பொதுக் கூட்ட அழைப்புடன் கணக்கறிக்கை இணைத்து அனுப்பப்பட்டிருந்தது அனைவருக்கும் இது முன்கூட்டியே பார்த்து தெளிவு பெற வாய்ப்பாக  இருந்தது.கணக்கறிக்கை ஏகமனதாக  அங்கீகரிக்கப்பட்டது.

**6. முன்மொழிவுகள்**

தற்போது சங்கத்தின் சில உபகரணங்கள் பல்வேறு உறுப்பினர்களிடம் தனித்தனியாக சேமித்து வைக்கப்பட்டுள்ளன. இது நடைமுறையில் சிரமமாகவும் அசௌகரியமாகவும் உள்ளது. மேலும் எல்லோரிடமும் அவற்றை வைத்திருக்க போதுமான

இடவசதி இல்லை.
எனவே இனிமேல் அனைத்து உபகரணங்களையும் ஒரே இடத்தில் சேமித்து வைக்க வேண்டும் என்று முன்மொழியப்பட்டது.
உபகரணங்களை எங்கு சேமிப்பது குறித்து பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. மேலும் சங்கத்திற்குப் இந்த உபகரணங்கள் இன்னும் தேவையா என்பதை நிர்வாக சபை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டது.
மன்மதன் அவர்கள் தற்காலிகமாக ஒரு அடுக்குமாடி வீட்டின் அடித்தள அறையில் (kælder) உபகரணங்களை வைத்திருக்கத் தயாராக உள்ளதாக தெரிவித்தார். அந்த இடம் உலர்ந்ததாக இருப்பினும் சூடாக்கப்படாத இடமாகும்.
எலிகள் போன்றவற்றால் சேதம் ஏற்படாமல் இருக்க உபகரணங்களை ஒரு பெட்டிக்குள் வைத்து பாதுகாப்பாக வைக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது.
சிலர் அந்த வகை அடித்தள அறைகளில் திருட்டு ஏற்படும் வாய்ப்பு இருக்கலாம் என்று கவலை தெரிவித்தனர். அதற்கு பதிலாக அத்தகைய சூழ்நிலையில் தனிப்பட்ட வீட்டுப் பொருள் காப்பீடு மூலம் பாதுகாப்பு கிடைக்கும் என்பதில் அனைவரும் ஒப்புக் கொண்டனர்.

**7.நிர்வாகசபை தேர்வு**:

திரு.அன்ரனி தாஸ் மற்றும் திரு.கோகுலன் அவர்கள் நிர்வாக சபையில் இருந்து விலகுவதாக தெரிவித்தனர்.

திருமதி.காயத்திரி மற்றும் திரு.சுஜீவன் அவர்கள் புதிய நிர்வாகசபை உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**நிர்வாகசபை உறுப்பினர்கள்:**

திருமதி.காயத்திரி மன்மதன்
திரு.சுஜீவன் நாகேந்திரன்
திருமதி.சுதாம்பிகை வாமதேவன்
திருமதி.லலிதா சிவகுமார்
திரு.செல்வராஜா வீரசிங்கம்

**மாற்று உறுப்பினர்கள் (Suppleanter)**:

திரு.கணேசரத்தினம் சுப்பிரமணியம்
திரு.சிவசுந்தரம் சுப்பிரமணியம்

**கணக்காய்வாளர்கள்**:

திரு.டானியல் குணரத்தினம்
திரு.மகேந்திரன் சுந்தரலிங்கம்

கூட்டத்தில் திருமதி.சுதாம்பிகை அவர்கள் தொடர்ந்து பொருளாளராக பணியாற்றவும், திரு.செல்வராஜா அவர்கள் விளையாட்டு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாளராக செயல்படவும் தீர்மானிக்கப்பட்டது.
திரு அன்ரனி தாஸ் அவர்கள் சங்கத்திற்கு

சொந்தமான கிரெடிட் கார்டை திருமதி.சுதாம்பிகை அவர்களிடம் ஒப்படைத்தார்.
நிர்வாகசபையின் மற்ற பொறுப்புப் பதவிகளை முதல் நிர்வாகசபை கூட்டத்தில் உறுப்பினர்கள் தாங்களே தேர்வு செய்வார்கள்.

**8. பிற விடயங்கள்**

2026 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு கட்டணம் தொடர்பாக சில தவறான புரிதல்கள் ஏற்பட்டுள்ளன.
சங்கம் அனைத்து உறுப்பினர்களுக்கும் வருடத்திற்கு ஒருவருக்கு 350 குரோனர் விளையாட்டு கட்டணம் என அறிவித்திருந்தது. சில உறுப்பினர்கள் 350 குரோனர் முழுத் தொகையையும் செலுத்தியுள்ளனர், ஆனால் சிலர் 300 குரோனர் மட்டும் செலுத்தியுள்ளனர்.
எனவே ஆண்டின் முடிவில்:
300 குரோனர் மட்டும் செலுத்திய உறுப்பினர்களிடமிருந்து 50 குரோனர் கூடுதல் வசூலிக்கப்படும், அல்லது
350 குரோனர் செலுத்திய உறுப்பினர்களுக்கு 50 குரோனர் திருப்பி வழங்கப்படும்.
கட்டணம் போன்ற விஷயங்களில் உறுப்பினர்களுக்கு தகவல் வழங்குவது நிர்வாகசபையின் பொறுப்பு என்பதை அனைவரும் ஒப்புக் கொண்டனர்.
ஒரு உறுப்பினர் மின்னஞ்சல் மூலம் நிர்வாகசபைக்கு தொடர்புகொண்டால், அந்த மின்னஞ்சல் கிடைத்ததை உறுதிப்படுத்தி, பதில் வழங்க எவ்வளவு காலம் ஆகும் என்பதையும்

தெரிவிக்க வேண்டும் என்பதையும் அனைவரும் ஒப்புக் கொண்டனர்.
விளையாட்டு உறுப்பினர்கள் ஒரு வாட்ஸ்அப் (Whatsapp)குழு உருவாக்கியுள்ளனர்.
அதில் வர முடியாத தகவல்
விளையாட்டு நேர மாற்றம்
எந்த விளையாட்டு அரங்கில் விளையாடப்படுகிறது என்பதைக் குறித்து தகவல் பகிரப்படுகிறது.
இந்த குழுவில் பொருளாளர் அவர்களையும் சேர்க்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது, ஏனெனில் நகராட்சியிலிருந்து வரும் விளையாட்டு அரங்கு வாடகை ரசீதுகளை அங்கீகரிப்பதில் சில சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.
மேலும் விளையாட்டு பொறுப்பாளர் திட்டமிடப்பட்ட செயல்பாடுகளை பற்றி நிர்வாகசபைக்கு தொடர்ந்து தகவல் வழங்க வேண்டும்.
நிர்வாகசபை உறுப்பினர்கள் சில பணிகளை மற்ற உறுப்பினர்களுக்கு ஒப்படைத்தாலும், அந்தப் பணிகள் ஒப்பந்தப்படி நிறைவேற்றப்படுவதற்கான இறுதி பொறுப்பு நிர்வாகசபைக்கே இருக்கும்.
சில உறுப்பினர்கள் விளையாட்டு நடைபெறும் நேரம் மற்றும் இடம் பற்றிய தகவலை முன்கூட்டியே தெரிந்துகொள்ள விரும்புகின்றனர். அதனால் அவர்கள் பார்வையாளர்களாக வரவும், அதே நேரத்தில் மற்றவர்களுடன் சந்திப்புகளையும் ஒருங்கிணைக்கவும் முடியும்.
எந்த எந்த செயல்பாடுகளுக்கு சங்கம் நிதி உதவி வழங்கும் என்பதை நிர்வாகசபை தீர்மானித்து உறுப்பினர்களுக்கு அறிவிக்கும்.

**கூட்டத்தில் முன்மொழியப்பட்ட செயல்பாடுகள்:**

மாதத்திற்கு ஒருமுறை கூட்டு உணவு ஏற்பாடு செய்தல்
ஓய்வூதியம், காப்பீடு போன்ற பல்வேறு தலைப்புகளில் தமிழில் விளக்கம் அளிக்க ஏற்பாடு செய்தல்.
பதவியிலிருந்து விலகும் நிர்வாகசபை உறுப்பினர்கள் நல்ல ஒத்துழைப்பிற்கும் உறுப்பினர்கள் வழங்கிய உதவிக்கும் நன்றி தெரிவித்தனர்.
இதுவரை நிர்வாகசபை செய்த பணிக்காக அனைவரும் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.
முன்னாள் நிர்வாகசபை உறுப்பினர்கள் குறிப்பாக திரு.கிருபா அவர்களுக்கு இந்த காலப்பகுதியில் அளித்த பெரிய உதவிக்காக சிறப்பு நன்றியை தெரிவித்தனர்.